19

# திரு அவதாரம்

## யோவான் 1:14-18

*"அந்த வார்த்தை மாம்சமாகி ... நமக்குள்ளே வாசம்பண்ணினார் ..."*
*(யோவான் 1:14).*

திரு அவதாரம் (அதாவது, தேவன் நம்மைப்போல் ஒருவராகுதல்) என்ற சிந்தனையில் நமது தலைகள் வலிக்கின்றன! மனிதன் தேவனாக இருக்க விரும்புகிறான் - இதை நாம் நிச்சயமாகவே புரிந்துகொள்கிறோம். ராஜரீகமான, முடிவில்லாத, மாற்றப்பட இயலாத, நித்திய தேவன் மனிதனாவதை ... உதவியற்ற ஒரு குழந்தையாவதைத்தான் நாம் புரிந்துகொள்ள இயலவில்லை! இதைப்பற்றித் தேவன் ஒருவர் மாத்திரமே சிந்தித்துப் பார்க்க முடியும்! அவர் மாத்திரமே இதைச் செய்ய முடியும்! திகைப்புக்குரிய இந்த உண்மையானது யோவான் சுவிசேஷத்தில் மறக்க முடியாத இரு வாக்கியங்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது: "ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்தில் இருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது"; "அந்த வார்த்தை மாம்சமாகி ... நமக்குள்ளே வாசம்பண்ணினார்" (யோவான் 1:1, 14அ).

### தேவனுடைய குமாரன் மனிதரானார்!

தேவனுக்கும் மனிதருக்கும் இடையில் ஒரே மத்தியஸ்தராக இருப்பவர் இயேசுவே (1 தீமோத்தேயு 2:5, 6). அவர் வானத்திலிருந்து வந்த ஜீவ அப்பமாக இருக்கிறார் (யோவான் 6:48-58). பரிசுத்த மலையில் தேவன், "இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன்; இவருக்குச் செவிகொடுங்கள்" என்று கூறினார் (மத்தேயு 17:5; 2 பேதுரு 1:17, 18ஐக் காணவும்). திரு அவதாரம் என்பது "அற்புதங்களுக்கெல்லாம் அற்புதமாக" உள்ளது.

பூமிக்குரிய ஒரு தாயின் வானத்திற்குரிய மகன்,
வானத்திற்குரிய ஒரு தகப்பனின் பூமிக்குரிய மகன்,
மனிதராயிராத அளவுக்குத் தெய்வீகமானவர்,
தெய்வீகமிராத அளவுக்கு மனிதரானவர்.

இயேசு கிறிஸ்து புனைந்துரைக்கப்பட இயலாதவராக இருக்கிறார். தேவன், இரட்சிப்பின் சத்தியத்தை இயேசுவுக்குள் பொதிந்து வைத்து

அவரை நம்மிடையே சஞ்சரிப்பவராக அனுப்பினார்! இயேசு, தம்மைத் தேவன் என்று அழைத்தவர்களையோ அல்லது தம்மை வணங்கியவர்களையோ ஒருக்காலும் கடிந்து கொண்டதில்லை. உடல் வடிவில், ஒரு மனிதராக கிறிஸ்து வருகை தந்த விஷயமானது வேதவாக்கியங்களின் மையப்பகுதியாக உள்ளதென்று நாம் கூற முடியும். இயேசு, மனிதராக வந்த வார்த்தையாக - தேவனுடைய ஜீவனுள்ள வார்த்தையாக - இருக்கிறார்! இயேசு தேவனாக இருக்கிறார் என்று நாம் விசுவாசிக்கிறோம், ஆனால் மனிதராக வந்த இயேசு தேவனாக இருக்கிறார் என்றும் நாம் விசுவாசிக்க வேண்டும்!

கிறிஸ்தவமானது அத்தியாவசியமாகவே வரலாற்றுப் பூர்வமானதாக உள்ளது. அது "பொய்க்கதைகளின் மத்தியிலான பொய்க்கதை"யாக பொருளற்ற புனைகதையாக இருப்பதில்லை. இயேசு நம்மில் ஒருவராகி, நமது உதாரணமாக வாழ்ந்து, தேவனுடைய சத்தியத்தை நமக்குப் போதித்து, நம்மைத் தேவனிடத்தில் சேர்ப்பதற்காக நமக்காக மரித்தார் என்பது எல்லா சத்தியங்களிலும் மாபெரும் சத்தியமாக உள்ளது.

## கன்னிப் பெண்ணிடம் பிறத்தல்

இயேசுவின் தெய்வீகத்துவம் என்பது அவர் கன்னிப் பெண்ணிடம் பிறத்தலுடன் தவிர்க்க இயலாத வகையில் தொடர்புகொண்டுள்ளது (மத்தேயு 1:18-25). இயேசுவின் பெற்றோர் இருவரும் மனிதர்களாக இருந்திருந்தால், அவரது இரத்தம் நம்முடைய இரத்தம் போன்றே தகுதியற்றதாக இருந்திருக்கும். அவர் தாமே உயிர்த்திருக்கவோ அல்லது மற்றவர்களை உயிர்ப்பித்து இருக்கவோ முடிந்திராது. "கன்னிப் பெண்ணிடம் இருந்து பிறத்தல் என்ற விஷயம் இல்லாத கிறிஸ்தவமானது, இரத்தத்தினால் இரட்சிப்பு இல்லாத மற்றும் உயிர்த்தெழுதல் இல்லாத மதமாகிறது. அது இந்த வாழ்வுக்கு மாத்திரமான ஒரு சமூக சுவிசேஷமாக குறைக்கப்படுகிறது" என்று ஹியூகோ மெக்கார்டு கூறினார்.[1]

கிறிஸ்துவின் தெய்வீகத்தைக் காட்டிலும் அவரது மனுஷீகத்திலேயே மனிதர் அனேகமாக இடறுகின்றனர். இயேசு மனிதராக இருக்கையில், அவர் ஒரு மேடையில் நாடகம் நடப்பிப்பது போன்று, மனிதரின் இயக்கங்களுடன் மாத்திரம் சென்று கொண்டிருக்கவில்லை. தோட்டத்தில், உண்மையான வியர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாக அவரது முகத்தில் இருந்து வடிந்து விழுந்தது (லூக்கா 22:44). "மனுஷ குமாரன்" என்பது அவருக்குப் பிரியமான பெயராக இருந்தது, இது புதிய ஏற்பாட்டில் எண்பது முறைகளுக்கும் அதிகமாகக் காணப்படுகிறது. இயேசுவின் தெய்வீகத்துவமானது அவரது மனுஷீகத்தில் மிகச்சிறப்பாகச் செயல்விளக்கப்படுத்தப்படுகிறது.

சிலவேளைகளில் நாம் நற்செய்தியை நம்பிக்கையின்மையுடன் வரவேற்கிறோம், இருப்பினும் மோசமான செய்திகளை நாம் உடனே விழுங்கி விடுகிறோம். முற்றான சத்தியத்தை நாம் நிரூபிக்கத் தேவையில்லை. முற்றான சத்தியம் தன்னைத்தானே நிரூபித்துக் கொள்கிறது. தேவன் தேவனாக தேர்ந்தெடுக்கப்படுவதற்காக நிற்கவில்லை. அவர் தேவனாக

*இருக்கிறார். அது சத்தியமாக உள்ளது. போதனை, இறையியல் மற்றும் சத்தியம் ஆகியவையே இன்றைய நாட்களில் மதத்திற்கு அத்தியாவசியமான தேவைகளாகும்!*

## இயேசு கர்த்தராக இருக்கிறார்

*மனிதரான இந்த கிறிஸ்து கர்த்தராகவும் ஆக்கப்பட்டார்! பவுல் பின்வருமாறு எழுதினார்,*

> *ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார் (பிலிப்பியர் 2:9-11).*

*அவரது கர்த்தத்துவம் பற்றிய இந்த உண்மையானது மிகவும் எளியதாக உள்ளது, இருப்பினும், இது மிகவும் ஆழ்ந்தறிவு கொண்டதாகவும் உள்ளது! இதைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள்: நாம், நம்மால் காணக்கூடாதவராக இருக்கிற தேவனிடத்தில் ஜெபிக்கிறோம், மற்றும் மாம்சத்தில் நாம் கண்டிராத அவருடைய குமாரனின் நீதிநெறிகளினால் பரலோகம் செல் வதை எதிர்பார்க்கிறோம். மேலே செல்லும் வழி கீழ்நோக்குவதாக உள்ளது; நாம் நிரப்பப்படுவதற்கு நம்மை வெறுமையாக்குகிறோம். நாம் சரியாக்கப்படுவதற்கு நாம் தவறாக இருப்பதை அறிக்கை செய்கிறோம். பலவீனர்களே பலவான்களாக உள்ளனர்; மிகவும் ஏழையானவர்களே மிகவும் ஐசுவரியவான்களாக உள்ளனர். நாம் வாழ்வதற்காக மரிக்கிறோம், பெறுவதற்காகக் கொடுக்கிறோம்.*

*கல்வாரியில் இருந்த நடுச்சிலுவையானது கிறிஸ்துவினுடையதல்ல - அது நம் எல்லாருக்கும் உரியதாகும். மரித்தல் என்பதே இயேசு மனிதரான தற்குக் காரணமாக இருந்தது. இயேசுவின் நித்திய தனிச்சிறப்பு என்பதே யோவான் சுவிசேஷத்தில் அவரது முழு வலியுறுத்தமாக உள்ளது. நிருபங் களை வாழ்வதற்கான வல்லமை சுவிசேஷங்களில் உள்ள சிலுவையின் வரலாற்றில் காணப்படுகிறது.*

*இந்த சத்தியம், தேவனின் "ஆச்சரியமான கிருபை"யை வெளிப் படுத்துகிறது. திரு அவதாரத்தில் இயேசு தம்மை மனிதத்துவத்துடன் நித்தியத்திற்கும் தொடர்புபடுத்தினார். நாம் ஒருக்காலும் தேவனாக இருந்ததில்லை மற்றும் ஒருக்காலும் தேவனாக இருக்கப் போவதில்லை! இயேசு இவ்விரண்டு தன்மைகளும் கொண்டிருந்தார், அவர் முற்றிலும் தம்மைத் தாழ்த்தினவராகவும் முற்றிலும் உயர்த்தப்பட்டவராகவும் இருந்தார். அவர் உயர்த்தப்பட்ட நிகழ்ச்சியானது அவரது மனிதத் துவத்தை அழித்துவிடவில்லை; மாறாக, அது அவரது மனிதத்துவத்தை மகிமைப்படுத்தியது.*

*சிலுவையைத் தவிர ...*
*வேறு வழி எதுவும் இல்லை!*

---

குறிப்பு

[1]ஹியுகோ மெக்கார்ட், "நமது நித்திய இரட்சகர்" என்ற பாடத்தை "குமாரனாகிய தேவன்" என்ற புத்தகத்தில் வாசிக்கவும்.